# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்
# ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

# MCOP No.2556/2017

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | மசா.2 |
| பெயர் | பிரேம் குமார் |
| க/த.பெயர் | வேல்குமார் |
| வயது | 25 |
| விலாசம் | அண்ணா நகர் சென்னை |
| தொழில் | ATM cash filling |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6 ன் படி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 06.12.2024 ல் பதிவு செய்யப்பட்டது.

## முதல் விசாரணை

நான் விபத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியாவேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நான் கூறித்தான் விவரங்கள் இதில் கூறப்பட்டுள்ளது. இதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய ஆதார் அட்டை நகல் சாதசாஆ1.

## 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

விபத்து குறித்து காவல் துறையில் நான் புகார் அளிக்கவில்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. விபத்து சமயத்தில் நான் விபத்து நடந்த இடத்தில் தான் இருந்தேன் என்றும், விபத்தை நான் பார்த்ததற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் துறையினர் என்னை விசாரிக்கவில்லை. விபத்து குறித்து சாட்சியம் அளிக்க மனுதாரர் கேட்டுக்கொண்டார்,

அதனடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தில் 2 வாகனங்கள் சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். அந்த 2 வாகனங்களின் நிறம் தெரியுமா என்றால் இருசக்கர வாகனம் கருப்பு மற்றும் சாம்பல் கலர் மற்றும் ஆட்டோ மஞ்சள் கலர். இரண்டு வாகனங்களும் நேருக்கு நேர் மோதிகொண்டதால் விபத்து என்றால் ஆட்டோ இருசக்கர வாகனத்தின் பக்க வாட்டில் தான் வந்தது. விபத்து சாலையின் ஓரத்தில் இருந்து 2, 3 அடி தூரத்தில் இருந்தது. விபத்து ஆட்டோ செல்லும் பாதையில் இடது புறமாக நடந்தது என்றால் சரிதான்.

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

5 வது நீதிபதி
சென்னை